CPA

CENTRE FOR POLICY ALTERNATIVES

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# 100 நாள் சீர்த்திருத்த செயன்முறையின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கும், யாப்பு ரீதியான ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் தேவைப்படும் நடவடிக்கைகள்

***பெப்ரவரி 10, 2015, கொழும்பு, இலங்கை:*** அரசின் தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வரும் 100 நாள் சீர்த்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் பொதுவான திசை வழியை மாற்றுக் கொள்கைளுக்கான நிலையம் வரவேற்கின்றது. பல தசாப்தகாலமாக இடம்பெற்று வந்த சகிக்க முடியாத மட்டங்களிலான தாக்குதல்களின் பின்னர் இலங்கையின் ஜனநாயக நடைமுறைகளும், நிறுவனங்களும் உடனடியாக சீர்த்திருத்தங்களையும், ஒரு மறுமலர்ச்சியையும் வேண்டி நிற்கின்றன. நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு, அரசியலமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றின் மீள் ஸ்தாபிதம், தகவல்களை சுதந்திரமாகப் பெற்றுக் கொள்வதற்கு வகை செய்யும் சட்டவாக்கம் மற்றும் நாடாளுமன்ற கமிட்டி முறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் சீர்த்திருத்தங்கள் என்பவற்றுக்கு நாங்கள் பரந்த கோட்பாடுகளின் அடிப்படையில் முழு மனதுடன் ஆதரவளிக்கின்றோம். மேலும், ஜனநாயகம் மற்றும் பன்முகத் தன்மை என்பவற்றை பலப்படுத்துவதற்கென அடுத்த நாடாளுமன்றத்தில் மேலும் பல சீர்த்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது என்றும் நாங்கள் கருதுகின்றோம். அதிகாரத்தை ஒப்படைத்தல் மற்றும் பகிர்ந்து கொள்ளல் மற்றும் அடிப்படை மனித உரிமைகளின் பாதுகாப்பு ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய மாற்றங்களையும் இவை உள்ளடக்குகின்றன.

எவ்வாறிருப்பினும், புதிய அரசு பதவிக்கு வந்து அதன் முதலாவது முழு மாதத்தை பூர்த்தி செய்திருக்கும் நிலையில், அரசிற்குள் இந்த சீர்த்திருத்த செயன்முறை எவ்வாறு இடம்பெற்று வருகின்றது அல்லது அமைச்சரவை, நாடாளுமன்றம் மற்றும் தேசிய நிறைவேற்று சபை என்பவற்றுக்குள் இந்த முன்மொழிகள் எவ்வாறு உருவாகி வருகின்றன என்பது குறித்த விரிவான தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம். அரசியல் யாப்பு சீர்த்திருத்தம் என்பது குறிப்பாக, இலங்கையை போன்ற நீண்டகால ஜனநாயக பாரம்பரியமொன்றைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டை பொறுத்தவரையில், அரசு மற்றும் அரசியல் கட்சிகள் என்பவற்றுக்கு மட்டும் உரித்தான ஒரு விடயமாக இருந்து வரவில்லை. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு மத்தியில் இந்த சீர்த்திருத்தங்களின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் குறித்த பேச்சுவார்த்தைகள் எவ்வாறு இடம்பெற்று வருகின்றன என்பது குறித்த முழுமையான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவது மிக முக்கியமானதாக இருந்து வருகின்றது.

துரித கதியில் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்கென ஜனாதிபதி சிறிசேன தெளிவான விதத்தில் மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்டுள்ளார். இந்தப் பின்னணியில் இருந்து வரும் காலம் மற்றும் வளங்கள் என்பன தொடர்பான அழுத்தங்களை நாங்கள் அறிந்துள்ளோம். தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கும், மக்களுக்கு வழங்குவதற்கும் பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் கலந்தாலோசனை என்பவற்றை மேம்படுத்துவதற்கும், சீர்த்திருத்த செயன்முறை தொடர்பாக முடிவுகளை எடுக்கும் நடைமுறையில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மேலும் பல விடயங்களை மேற்கொள்ள முடியுமென நாம் நம்புகின்றோம். தகவல் மற்றும் தொடர்பாடல்

தொழில்நுட்பங்களின் முழுமையான ஆற்றல் இந்த விடயத்தில் அறவே பயன்படுத்தப்படவில்லை என்ற விடயத்தை நாங்கள் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். தேர்தல் பிரச்சாரங்களின் போது பொதுமக்களுக்கு மத்தியில் வாத விவாதங்களை தூண்டி விடுவதற்காக இந்த தொழில்நுட்பங்கள் ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதனையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். எனவே, இந்த தொழில்நுட்பங்களை இந்த சீர்த்திருத்தங்கள் தொடர்பாகவும் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால், அவை அவ்விதம் பயன்படுத்தப்படவில்லை. மேலும், தற்போதைய செயன்முறையின் இயல்பு மற்றும் வடிவம் என்பன சர்வதேச ரீதியில் அரசியல் யாப்புக்களை வரையும் மிகச் சிறந்த நடைமுறையின் மூலம் உருவாக்கப்பட்டிருக்கும் வெளிப்படைத் தன்மை மற்றும் பங்கேற்பு என்பன தொடர்பான அடிப்படை தர நியமனங்களை கூட நிறைவேற்றி வைத்திருக்கவில்லை.

சிறந்த நடைமுறையினை பின்பற்றுவதானது, இச்செயன்முறையின் முறையான ஒழுங்கு மற்றும் ஜனநாயக பங்கேற்புக்கான முக்கியமான தேவை என்பவற்றுக்கிடையில் தேவையான ஒரு சமநிலையை உறுதிப்படுத்துகின்றது. அரசு 19ஆவது திருத்த மசோதாவின் இறுதி வரைவை பிரசுரித்து, அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அது தொடர்பாக வாதங்களை முன்வைப்பதற்கு பொதுமக்களுக்கு ஆகக் குறைந்தது 2 வார கால அவகாசத்தை வழங்குதல் வேண்டும்.

பகிரங்க கலந்துரையாடல், விமர்சனம் மற்றும் மீளாய்வு என்பவற்றுக்கு உள்ளாக்கப்படுவதன் மூலம் இச்சீர்த்திருத்த முன்மொழிவுகளின் தரத்தை விருத்தி செய்து கொள்ள முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. சீர்த்திருத்தங்கள் நீண்டகால நிலைத்திருக்கும் இயல்பு மற்றும் அவற்றின் சட்டபூர்வ தன்மை என்பன, தமது ஆட்சி நடைமுறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பாக பொது மக்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் மட்டுமன்றி அவர்களுடைய கருத்துக்களை முனைப்பான விதத்தில் கவனத்தில் எடுக்கும் சந்தர்ப்பத்தில் மேம்பட முடியுமென நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். மேலும், இது இந்த சீர்த்திருத்தங்களுக்கான சுயநல அக்கறைகளைக் கொண்ட அரசியல் எதிர்ப்புக்களை குறைப்பதற்கும் உதவ முடியும். இலங்கை மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு இச்சீர்த்திருத்த செயன்முறை எந்த விதத்திலும் சீர்குலைக்கப்படாதிருப்பதனை இது உறுதிப்படுத்த முடியும்.

இது தொடர்பாக, ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளருக்கு வாக்களித்திருக்கும் கணிசமான எண்ணிக்கையிலான வாக்காளர்களை அணுகுவது அரசின் முதன்மைப் பொறுப்பாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை வலியுறுத்துவது முக்கியமாகும். ஜனாதிபதி சிறிசேன அவர்களுக்கு கிடைத்திருக்கும் மக்கள் ஆணையின் நம்பகத்தன்மைக்கு பங்கம் விளைவிக்காத விதத்தில் அல்லது நல்லாட்சியை நோக்கிய சீர்த்திருத்தங்கள் எடுத்து வரப்பட வேண்டுமென்ற விதத்தில் பெரும்பாலான இலங்கை மக்கள் கொண்டிருக்கும் தேவை மற்றும் விருப்பு என்பவற்றை வீரியமிழக்கச் செய்யாத விதத்தில் இலங்கையின் புதிய அரசியல் கலாசாரம் மற்றும் யாப்பு ரீதியான ஜனநாயக கட்டமைப்புக்கள் என்பவற்றை கட்டியெழுப்புவதில் பொதுசன அபிப்பிராயத்தை பிரதிபலிக்கும் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கி, பங்குபற்றச் செய்தல் வேண்டும். இச்செயன்முறை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியிருப்பதுடன், மக்கள் ஆணையின் உண்மையான உணர்வுகளை கருத்தில்கொண்டு அதன் வெளிப்படைத் தன்மை மற்றும் அதில் பொதுமக்களின் பங்கேற்பு என்பவற்றை விருத்திச் செய்து கொள்வதற்கென உடனடி வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலம் பொதுமக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படுவதனை அரசு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அடிப்படை ஜனநாயக மற்றும் அரசியல் யாப்பு ரீதியான கோட்பாடுகளை நாட்டில் மீள ஸ்தாபிப்பதற்கென இந்த அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்தக் கண்ணோட்டத்தில் இருந்து நோக்கும் பொழுது, 100 நாள் செயன்முறைக்கு அப்பால் எமக்கு கவலையளிக்கக் கூடிய வேறு சில மாற்றங்களும் தோன்றியுள்ளன. மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசர் பதவி வகித்தமை சட்ட விரோதமானதாகவும், சட்ட ரீதியாக உரித்தற்றதும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், அதே வேளையில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட விதம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், நீதித் துறைக்குமிடையே நிலவி வர வேண்டிய பொருத்தமான உறவின் மீது எடுத்து வரக் கூடிய பின்விளைவுகள் குறித்து அச்சங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்துள்ளது.

எதிர்காலத்தில், நியாயப்படுத்த முடியாத காரியங்களை செய்வதற்கும் இந்த முன்னுதாரணம் பயன்படுத்தப்பட முடியும். இது தொடர்பாக அரசினாலும், சட்டத்தரணிகள் சங்கத்தினாலும் பின்பற்றப்பட்ட நடவடிக்கை முறை சட்ட நுட்ப உத்தியொன்றின் பிரகாரம் செயற்படுவதனையே காட்டுகின்றது. இது கண்டிப்பான விதத்தில் சட்டபூர்வமாக இருந்து வருகின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லாவிட்டாலும் கூட, முடிவுகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் சட்டபூர்வத் தன்மை குறித்த பொதுமக்களின் மனப் பதிவுகள் ஒரு ஜனநாயகத்தில் அதே அளவு முக்கியத்துவம் பெறுகின்றன. இது தொடர்பாக ஒரு விரிவான நடவடிக்கை தொகுதியை முன்னெடுப்பது நடைமுறைச் சாத்தியமற்றதாக இருந்து வந்தாலும் கூட, அரசு பீரிஸை பதிவியிலிருந்து நீக்குவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது அதற்கு ஆதரவாக ஒரு நாடாளுமன்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால், இம்மாதிரியான சந்தேகங்கள் தோன்றுவதனை தவிர்த்துக் கொண்டிருக்க முடியும். நாடாளுமன்றத்திற்குள் அவ்விதமான உடன்பாடு எட்டப்பட்டிருந்தால், சட்ட நுட்ப அடிப்படையிலான நியாயப்படுத்தலுக்கும் அப்பால் பிரதம நீதியரசரின் பதவி நீக்கத்திற்கு அசைக்க முடியாத ஒரு சட்டபூர்வ தன்மையை பெற்று தந்திருக்கும். மேலும், இச்செயன்முறையில் அரசும், சட்டத்தரணிகள் சங்கமும் வகித்த பாத்திரம் குறித்து சந்தேகங்கள் தோன்றுவதற்கான வாய்ப்புக்களையும் இல்லாமல் செய்திருக்கும்.

அதே போல ஊழல் மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளும், (இலஞ்சம் அல்லது ஊழல் என்பவற்றை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் தலைவரை போன்ற) முன்னைய அரசினால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளை அகற்றுவதும் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வீதி ஆர்ப்பாட்டங்களுக்கூடாகவும், சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரிகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகள் ஆகியோருக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வைபவங்களை அரசியல்வாதிகள் அபகரித்துக் கொள்வதன் மூலமும் மேற்கொள்ளப்பட முடியாது. இழைக்கப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் அனைத்து தவறுகள் தொடர்பாகவும் சட்ட நடவடிக்கை விசாரணையின் போது கண்டிப்பான விதிமுறைகளும், விரிவான சட்ட ரீதியான நிலைப்பாடுகளும் பின்பற்றப்படுதல் வேண்டும். இலங்கை மக்கள் ஜனவரி மாதம் இடம்பெற்ற தேர்தலின் போது அரசியல் யாப்புக்கு மதிப்பளிக்கும் ஜனநாயகமொன்றை ஸ்தாபித்துக் கொள்வதற்காக வாக்களித்துள்ளார்கள். இத்தகைய ஜனநாயகமொன்றில் அநீதிகள் மற்றும் மனக் குறைகள் என்பன பொருத்தமான நிறுவன ரீதியான வழிமுறைகளுக்கூடாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமென்ற விடயத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம். கும்பல் நீதியை பார்க்கிலும் சிறிது சிறந்ததாக இருந்து வரக் கூடிய முறைகளுக்கூடாக அவற்றை களைய முடியாது.

சுதந்திர தின கொண்டாட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் சமூக நல்லிணக்கத்தை எடுத்து வரும் திசையில் அரசு மேற்கொண்டிருக்கும் குறியீட்டு இயல்பிலான பல சமிக்ஞைகளை வரவேற்கும் அதே வேளையில், போர் இடம்பெற்ற காலப் பிரிவின் போது ஆழமாக வேரூன்றியிருந்த ஏனைய வழிமுறைகள் மற்றும் நடைமுறைகள் இன்னமும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனையிட்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவலையடைகின்றது. குறிப்பாக, சமாதான காலப் பிரிவின் போது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டம் ஒழுங்கு தொடர்பான கருமங்களை மேற்கொண்டு வருவதற்கென பாதுகாப்புப் படையினரை அழைப்பதில் எவ்வித நியாயமும் இருந்து வரவில்லை என நாங்கள் நம்புகின்றோம். உள்நாட்டு அரசியல் யாப்பு மற்றும் நியதிச் சட்டங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமையவும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் கடப்பாடுகளுக்கமையவும் சமூக வாழ்க்கைக்கு தெளிவான விதத்திலான ஓர் அபாயம் நிலவி வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே சிவில் அதிகாரிகளுக்கு உதவும் பொருட்டு பாதுகாப்புப் படையினரை அழைப்பது சட்டபூர்வமானதாகவும், தேவையானதாகவும் இருந்து வருகின்றது. இன்றைய இலங்கையில் அத்தகைய ஒரு தேவை இருந்து வருவதாக மாற்றுக் கொள்கைளுக்கான நிலையம் கருதவில்லை.

இது தொடர்பாக பயங்காரவாத தடுப்புச் சட்டம் (PTA) நீக்கப்பட வேண்டும் என்ற விதத்தில் நீண்ட நாட்களாக, ஒரே சீரான விதத்தில் நாங்கள் முன்வைத்து வந்திருக்கும் வேண்டுகோளை மீண்டும் இங்கு வலியுறுத்துகின்றோம். அதற்குப் பதிலாக, தேவை ஏற்படின், சர்வதேச தர நியமங்களுக்கு பொருந்தக் கூடிய சட்டவாக்கங்களை எடுத்து வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். மேலும், இச்சட்டத்தின் நீதி நியாயமற்ற ஏற்பாடுகளின் கீழ் நீண்ட காலமாக தமது சுதந்திரத்தை இழந்தவர்களாக - பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல் என்பவற்றுக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் - தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெருந்தொகையான இலங்கை

பிரஜைகளை விடுவிப்பதற்கு மிகத் துரிதமான விதத்தில் முடியுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நாங்கள் அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். அவசர கால ஒழுங்குவிதிகளுக்கு பதிலாக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அமுலில் இருந்து வருகின்றன என்ற விடயத்தையும் மாற்றுக் கொள்கைளுக்கான நிலையம் குறிப்பிட விரும்புகின்றது. இவை அரசியல் யாப்புக்கு மாறானவையாகவும், வரம்பு மீறியவையாகவும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச சமவாயம் தொடர்பான எமது கடப்பாடுகளை மீறுபவையாகவும் இருந்து வருகின்றன. அவை உடனடியாக விலக்கிக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆக்கபூர்வமான இந்த விமர்சனங்களை, அவை முன்வைக்கப்படும் நல்லெண்ண உணர்வுடன் அரசு கவனத்தில் எடுக்கும் என்றும், இவ்விடயங்களை கையாள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் மாற்றுக் கொள்கைளுக்கான நிலையம் நம்புகின்றது. இங்கு முன்வைக்கப்பட்டிருக்கும் கரிசனைகள் தொடர்பாக பயனுள்ள விதத்தில் எதிர்வினையாற்றுவது, தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் சீர்த்திருத்த செயன்முறையின் வெற்றிக்கும், தரத்திற்கும் அளப்பரிய பங்களிப்புக்களை வழங்க முடியும். மேலும், அது சமாதானமும் ஜனநாயகமும் தழைத்தோங்கும் பன்முகத் தன்மையுடன் கூடிய ஐக்கிய இலங்கையொன்றை உருவாக்கும் பொருட்டு, இச்சீர்த்திருத்தங்கள் மீண்டும் ஒரு போதும் விலக்கிக் கொள்ளப்படாத நிலையை உறுதிப்படுத்தும்.

##

இலங்கையின் நல்லாட்சி மற்றும் மோதல் நிலைமாற்றம் என்பவற்றை எடுத்து வருவதற்கு நிறுவனங்களை பலப்படுத்தி, ஆற்றல்களை கட்டியெழுப்பக் கூடிய ஓர் உடனடித் தேவை நிலவி வருவதுடன், இச்செயன்முறைக்கு பக்கச்சார்பற்ற சிவில் சமூக குழுக்கள் முக்கியமான, ஆக்கபூர்வமான ஒரு பங்களிப்பை வழங்க வேண்டியுள்ளன என்ற உறுதியான நம்பிக்கையுடன் **மாற்றுக் கொள்கைளுக்கான நிலையம்** உருவாக்கப்பட்டது. பொதுத் துறையில் இந்நிலையம் வகிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட முதன்மையான வகி பாத்திரம், அஹிம்சை வழியில் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ளல் மற்றும் ஜனநாயக ஆளுகை என்பவற்றுக்கென மாற்றுக் கொள்கைகளை பரப்புவதனையும், பரப்புரை செய்வதனையும் நோக்காகக் கொண்ட முனைப்பான ஒரு வகிபாத்திரமாகும். அதன் பிரகாரம் இந்நிலையத்தின் பணிகள் பாரிய ஆராய்ச்சி கூறொன்றையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கூடாக பரப்புரை செய்யப்படும் மாற்றுக் கொள்கைகள் இனங்காணப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 24/2, 28th Lane, off Flower Road, Colombo 7, Sri Lanka
Tel: +94 11 2565304-6, 5552746, 5552748 | Fax: +94 11 4714460 | Email: cpa@cpalanka.org | Web: www.cpalanka.org